

அமரர்

# திருமதி சுபத்திராதேவி கேசவராஜன்

அவர்களின் ஞாபகார்த்த

# நினைவுமலர்

21.11.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



வட்டுக்கோட்டையை வாழ்விடமாகக்கொண்ட

அமரர்

# சுபத்திராதேவி கேசவராஜன்

அவர்களின் ஞாபகார்த்த

# நினைவுமலர்

## 21.11.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

இத் தரணியில் அன்பு சுரந்து
இல்லறத்தை நல்லறமாக்கி
வாசம் குன்றா வாழ்வு தந்து
வளர்ச்சிக்கு வழி காட்டினீர்
திரும்பும் இடமெல்லாம் நினைவு தந்து
ஆண்டவன் நிழலில் அமரத்துவம் அடைந்த
எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் பாதம் பணிந்து வணங்கி
கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து
இம்மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.
*ஓம்சாந்தி, சாந்தி, சாந்தி*

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோற்றம்
17 - 10 - 1940

மறைவு
22 - 10 - 2015

அமரர்

# திருமதி சுபத்திராதேவி கேசவராஜன்

மன்மத ஆண்டு ஐப்பசி மாதம்
மன்னு பூர்வ பட்ச தன்னரு
தசமித் திதியில் சுபத்திராதேவி
தசன் தாழ் சேர்ந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாக்கள்



## பஞ்சபுராணம்
## விநாயகர்துதி

*திருச்சிற்றம்பலம்*

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

## திருவாசகம்

யானே பொய்என் நெஞ்சும்
பொய்என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனைவந் தாறுமாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போ லகலப்
பொன்னின் செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம் விளங்க
அன்னநடை மடவாளுமைகோ னடி யோமுக்
கருள் புரிந்து
பின்னைப் பிற வியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

இறவாத இன்ப அன்புவேண்டிப் பின் வேண்டுகிறார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமைவேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல கலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின் பதந்த
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே!

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைப்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே!

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருக்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல் வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவலியே!

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகவும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவலியே!

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே!

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் கடிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப்பேடே
சகல கலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்லவித்தை யுத்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால்
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருங்செல்வப் பேறே
சகல கலாவல்லியே!

சொற்கும் பொருட்கு முயிராமெய்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரதின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவலியே!

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்ப்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

அமரத்துவம் அடைந்த சுபத்திரா தேவி கேசவராஜன் அவர்கள் அராலி மேற்கு (கோட்டைக்காடு) எனும் ஊரைச் சேர்ந்த தம்பிராசா வினயமூர்த்தி வைரரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி ஆவார். இவர் மானிப்பாய் கிரீன்( Green) ஞாபகார்த்த வைத்தியசாலையில் பிறந்தார் இவர் பெண்பிள்ளையாக பிறந்ததையிட்டு தகப்பன் கவலைப்பட்டார். அப்போது யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் அடுத்ததும் பெண்பிள்ளையாக பிறக்க வேண்டும் என்றும் இவருக்கு துணையாக இருப்பார். என பகிடியாக கூறி இவரை உற்சாகப்படுத்தினார். இவர் ஒக்டோபர் மாதம் 17ம் திகதி 1940 ஆண்டிலில் பிறந்தார். இவருக்கு சகோதரர்கள் ஆக தம்பிராசா காலஞ்சென்ற புனிதவதி காலஞ் சென்ற மணிமேகலாதேவி, சிவசோதிராசா ஆகியோர் பிறந்தனர்.

இவர் தன்னுடைய ஆரம்ப கல்வியை அராலி வள்ளியம்மை வித்தியாசாலையிலும், இடைநிலைக்கல்வியை யாழ்ப்பாணக் கல்லூரியிலும், உயர்கல்வியை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பட்டப்படிப்பு பிரிவிலும் பெற்று B.A London பட்டம் பெற்றார். தமிழ் வரலாறு,சமஸ்கிருதம் ஆகிய பாடங்களை படித்திருந்தார். இவர் தன்னுடைய ஆசிரியர் தொழிலை யாழ்ப் பாணக்கல்லூரியில் 1966ம் ஆண்டு ஆரம்பித்தார். தகப்பனாரும் அதே பாடசாலையில் கற்பித்தார். இவரும் போட்டியாக தமிழ் கற்பித்தார். தகப்பனுக்கு நிகராக இவருடைய மாணவர்களும் சிறந்த பெறுபேறுகளை பெற்று பாராட்டப்பட்டனர். இவர் ஆசிரிய நியமனம் பெற்ற கையோடு வதிவிடத்தை வட்டுக்கோட்டைக்கு மாற்றினார். இவருடைய அம்மம்மா Russell குடும்பத்தை சேர்ந்தவர். மதிய இடைவேளைகளில் பேர்த்தியா ருடன் கல்வி கற்கும் காலத்தில் கழித்து வந்தார். இவர் பாடசாலை தவிர்ந்த வேறு இடங்களுக்கு செல்லும் பொழுது தாயாருடன் தான் செல்வார்.

இவர் 1973ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 09ம் திகதி மானிப்பாயை சேர்ந்த திரு.செல்லத்துரை கேசவராஜனை திருமணம் முடித்தார். அவர் அமரர்களான செல்லத்துரை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரோன்மணியின் 3வது பிள்ளை ஆவார். இவருக்கு காலஞ்சென்ற சத்தியசிலன், திருமதி கணேஸ்பரன் பரமேஸ்வரி,காலஞ்சென்ற செல்வமணி ஆகியோர் சகோதரர்களாவர். திரு கேசவராஜன் யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் கடமை புரிந்துவந்தார். இவர்களின் திரு மணத்தின் ஊடாக இரு செல்லக்குழந்தைகளை பெற்றெடுத்தார்.

மூத்த பிள்ளை மகள் அவருக்கு தக்சாயினி என்று பெயர் வைத்தார். இவர் யாழ்ப்பாணக் கல்லூரியில் பயின்று யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் B. Music பட்டம் பெற்று யாழ்ப்பாண கல்லூரியில் ஆசிரியர் ஆனார். இவர் அச்சுவேலியை சேர்ந்த திரு தளையசிங்கம் அமரர் சந்திரலீலா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் தவசேகரை (விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) திருமணம் முடித்தார். இதன் பலனாக கேசிகன், யக்சியா என்னும் இரு குழந்தைகளை பெற்றெடுத்துள்ளார்.

இரண்டாவது பிள்ளை வரப்பிரதன் யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்து, யாழ்பல்கலைகழகத்தில் பட்டம் பெற்று, பேராதனை பல்கலைக்கழகத்தில் M.Sc பட்டம் பெற்றார். இராஜரட்ட பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக கடமை புரிந்தார். இவர் திரு சண்முகம் இந்துமதி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வி லாகினியை திருமணம் செய்தார். அவர் யாழ் பல்கலைகழகத்தில் விரிவுரையாளராக கடமை புரிந்தவர். இருவரும் அவுஸ்திரேலியாவில் வசிக்கின்றனர். இவர்களுக்கு அக்ஷயா, வினோத் என்னும் இரு பிள்ளைகள் உள்ளனர்.

அமரர் சுபத்திராதேவி குடும்ப முன்னேற்றத்தில் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர். குடும்பத்தில் கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் சுகநலம் பேணுதலில் மிகவும் கரிசனையுடையவர். இன்றைய குடும்பநிலைக்கு அவர்தான் காரணம். என்றால் மிகையாகாது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கிறோம்.

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அன்னை

எனது அம்மா என்னையும், வரனையும் கண்ணை இமை காப்பது போல் மிகவும் பக்குவமாக வளர்த்து வந்தார். குளிர்காலம் என்றால் சுவற்றர் அணிந்து, தலைக்கு தொப்பி,காலுக்கு காலுறை,பிஜாமா அணியவைத்துத்தான் எம்மைப் படுக்க வைப்பார். எங்களுக்கு நல்ல நல்ல புத்திமதிகள் கூறுவார். பெரியவர்கள் கதைக்கும் பொழுது சின்னப்பிள்ளைகள் பெரியவர்களின் வாய்பார்க்கக் கூடாது என்று எங்களை உள்ளே அனுப்பி விடுவார்.

எங்களுக்கு நல்ல நல்ல கதைகளை தான் வாசித்து சொல்லித்தருவார். எங்களையும் நல்ல கதைப்புத்தகங்களை வாசிக்க வைப்பார். ஆங்கில அறிவையும் நன்றாகப் புகட்டுவார். வீட்டில் ஆங்கிலத்தில் தான் பேச வேண்டும் என்று சொல்லுவார். ஆங்கிலப் புத்தகத்தை வாசிக்க வைப்பார். நாம் சிறுபிள்ளைகளாக இருக்கும் பொழுது, புஸ்பராணி Teacher இடம் English Elocution class ற்கு அனுப்பி வைத்து Grade one Exam தரம் இரண்டு படிக்கும் பொழுது என்னை எடுக்க வைத்தார். ஆங்கிலத்தில் அதிக கவனம் செலுத்தியமை நாம் சிறுபிள்ளைகளாக நைஜீரியா சென்ற பொழுதும், பாடசாலையில் ஆங்கிலப் பாடத்தில் நன்றாகச் செய்யவும். பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பாடத்தில் 'A' எடுக்கவும் எனக்கு உதவியாக உள்ளது. வரன் சொல்லுவார் தனக்கு Presentation ஆங்கிலத்தில் திறமையாகச் செய்யவும் மிகவும் உதவியாக உள்ளது எனக்கூறுவார்.

யாழ்ப்பாணக்கல்லூரி மீது மிகுந்த பற்றும் விசுவாசமும் உடையவர். கிறீஸ்தவ மதத்தையும் நன்றாக மதித்து நடப்பவர். நானும், வரனும் சிறுபிள்ளைகளாக இருந்த பொழுது எங்கள் இருவரையும் Sunday School ற்கு அனுப்பி உள்ளவர். தான் பாடசாலையில் படித்தது கிறீஸ்தவ சமயம் ஆனால் கற்பித்தது இந்து சமயம் என்று கூறுவார். அப்பா நைஜீரியாவில் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதும் எங்களை மிகவும் பக்குவமாக வளர்த்து வந்தார். நாங்கள் நைஜீரியாவிற்கு அம்மாவுடன் தான் போய் வந்தோம். உறவினர்கள் மீதும் மிகுந்த அக்கறையும், கரிசனையும் உடையவர். ஒவ்வொரு கிழமையும் மானிப்பாய்க்கு அப்பம்மா வீட்டிற்கு செல்லுவோம். அங்கே போய் நின்று தான் வருவோம் மாமிமார்,மச்சாள்மார்,மச்சான்மார் எல்லோரும் ஒரே குடும்பம், ஒரே சகோதரர் என்ற மனப்பாங்கை எம்மத்தியில் ஊட்டி உள்ளார்.

சண்டிலிப்பாயில் பெரியப்பாவீடு, சின்னம்மாவீடு கொக்குவிலில் பெரியம்மாவீடு, மானிப்பாயில் சித்திவீடு எல்லாவற்றிற்கும் கூட்டிச்செல்லுவார். வட்டுக்கோட்டையில் உள்ள உறவினர்கள் எல்லோரையும் எமக்குச் சொல்லித்தருவார். ஏழைமக்களுக்கும் எமது அம்மாவும் நன்றாக உதவி செய்வார். தாத்தா ஏழைமக்களுக்கு உணவு,உடை கொடுப்பதோடு கொட்டைக்காட்டு ஆஸ்பத்திரியையும் கட்டுவித்தார். என்று அம்மா அடிக்கடி கூறுவார். அது இப்பொழுது மிகவும் பிரபல்யமாக உள்ளது. ஏழைப்பெண் ஒருவர் பிரசவ வேதனையால் ஆஸ்பத்திரிக்கு செல்ல முடியாமல் துடிதுடித்து இறந்ததைக் கண்டு மனம் இரங்கி உடனடியாக அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு அவ் ஆஸ்பத்திரியை கட்டுவித்தார். தாத்தா (J.P) ஆக இருந்த பொழுது பிறப்பு சேட்டுவிக்கற் இல்லாதவர்களுக்கு சத்தியக் கடதாசி முடித்துக்கொடுத்து பிறப்பு சேட்டுவிக்கற் செய்து கொடுத்து உள்ளார். இப்படி நாமும் எல்லோருடனும், அன்பாகவும், பாசமாகவும், இரக்கசுவாபம் உடையவர்களாகவும் சாந்தமாகவும் வளரவேண்டும் என்றும் அடிக்கடி எமக்குக் கூறுவார். தாத்தாவின் வழியை வரன் கூடுதலாகப் பின் பற்றி வருவதற்கு அம்மா ஒரு அடித்தளமாக அமைந்து உள்ளார்.

அப்பாவும், அம்மாவும் இன்பத்திலும், துன்பத்திலும் வாழ்விலும், தாழ்விலும், பாசம் மணமும் போலவும்,நகமும் சதையும் போல மிகுந்த ஒற்றுமையாகத்தான் வாழ்ந்து வந்தார்கள். அப்பா பாடசாலையில் அதிபராக இருந்த பொழுது ஒருநாள் கூட வீட்டில் நிற்பது கிடையாது. ஞாயிற்றுக்கிழமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் கூட சில வேளைகளில் பாடசாலைக்கு சென்று விடுவார். அதற்கு அம்மா மிகவும் உறுதுணையாக நின்று குடும்பப் பொறுப்பை மிகவும் பக்குவமாகப் பார்த்து வந்தார். அதே சமயம் பாடசாலையில் நடைபெறும் எல்லா நிகழ்விலும் பங்குபற்றுவார். Brother Hood, From, Lycuem தலைவியா இருந்து நாடகங்கள், பேச்சுக்கள் எல்லாம் பழக்கியும் உள்ளார். தமிழ்த்துறைத்தலைவியாக இருந்தும் வில்லுப்பாட்டுகள், பேச்சுப் போட்டிகள் எல்லாம் முதலிடம் வருவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்து வந்துள்ளார். எனக்கு ஒரு சிறுவயது ஞாபகம் வருகிறது எனக்கு ஆறுவயதாய் இருக்கும் பொழுது சிவப்பு இல்லம் முதல் இடத்தை பெற்ற சமயம் அம்மா பெரிய அக்காமார், அண்ணாமார்களுடன் என்னையும் கூட்டிச்சென்று எல்லா இடத்தையும் காட்டினார். இவை எல்லாவற்றுக்கும் எங்களுடன் இருக்கும் மகேஸ்அக்காவும் உதவியாக உள்ளார். வரனுக்கு கிரிக்கற் மிகுந்த ஆர்வத்தையும் ஊட்டி கிரிக்கற் மிகுந்த திறமையாக விளையாட வழிகாட்டி உள்ளார். எமது பழைய பேராயர் ஜெபநேயன் ஐயா அவர்கள் அதிபராக இருந்த சமயத்தில் Assembly இல் Match Win பண்ணிய சமயம் “வீரமகனைப் பெற்று எடுத்த வீரத்தாய்க்கு எனது வாழ்த்துக்கள் எனக்கூறி” வரப்பிரதன் என்ற பெயரை வீரப்பிரதன் என மாற்றுவோம் என்று கூறினார். இந்தப் பெருமை எங்கள் அம்மாவையே சாரும். எனக்கு சிறுவயதிலேயே சங்கீதத்தில் ஆர்வத்தை அம்மா ஊட்டியவர். பிரபாகரி ரீச்சரின் அப்பாவிடம் என்னை 7 வயதில் கொண்டு போய் சேர்த்தவர். இது தான் சங்கீத ஆசிரியையாக வருவதற்கு உறுதுணையாக உள்ளது.

அப்பா,அம்மா திருமணத்தின் போது இங்கு முன்னாள் அதிபராக இருந்த இராஜன் கதிர்காமர், முன்னாள் உப அதிபர் தர்மன் குலோத்துங்கன், முன்னாள் அதிபர் திரு.நோயல் விமலேந்திரன், காலஞ்சென்ற அதிபர் திரு.போல் ,முன்னாள் மேற்பார்வையாளர் திரு.அன்னப்பா ஜெயராஜன் எல்லோரும் அப்பாவின் உறவினர்கள் இருபகுதியினரை அதிர்ச்சி அடைய வைத்ததாக அம்மா கூறினார். அட எமது உறவினரையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் திருமணம் செய்கிறீர்கள் என்று கூறியதாக அம்மா தான் கூறும் விடயத்தை இங்கு குறிப்பிடச் சொல்லி உள்ளார். தமது ஆரம்ப கால வாழ்க்கையில் அப்பாவும்,அம்மாவும் கைகோர்த்த வண்ணம் தான் ஒழுங்கையால் செல்வார்கள் என்று கூறினார்.

எமக்கு கல்வியில் அக்கறை காட்டியது போல திருமணவிடயத்திலும் எனக்கு அப்பாவை மாதிரி B.Sc பட்டதாரிதான் வரவேண்டும் என்று ஆசைப்பட்டார். எனது விருப்பமும் அதுதான். அதே மாதிரியே எனக்கு நிறைவேறியது வரனுக்கும் அம்மா ஆசைப்பட்டமாதிரியே திருமணம் அமைந்தது. வரனுக்கு அடிக்கடி அம்மா கூறும் வார்த்தை நீர் அப்பாவை வெல்லப்படிக்க வேண்டும். என்றுதான் கூறுவார் அது நிறைவேறிவிட்டது.

எனக்கும் வரனுக்கும் கூட அம்மா தமிழ்,சமயம் போன்ற பாடங்களை கற்பித்தும் உள்ளார். வரனின் வகுப்பு மாணவ,மாணவிகள் செல்வமணிரீச்சரை அன்ரி என்றும், சித்தம்பலம்ரீச்சரை சித்தி என்றும், அம்மாவை மாமி என்றும் கூறுவார்கள்.

தன்னிடம் படித்த மாணவர்களாகிய, தற்பொழுது யாழ்ப்பாணக்கல்லூரியில் பணி புரியும் உப அதிபர்கள் சந்திரன் பிரான்சில், வண.தேவமித்திரன், கோமலாரீச்சர்,மோகன் மாஸ்டர், கிளடிஸ்ரீச்சர், தேவதர்சினிரீச்சர், சால்ஸ்மாஸ்டர், தேவராஜா மாஸ்டர், ரொசானிரீச்சர், சுதர்சன்மாஸ்டர், டேவிற்மாஸ்டர், ராஜசேகரம்மாஸ்டர், சிவதரன்மாஸ்டர் இவர் களது செயற்பாடுகள், குறும்புத்தனங்கள் எல்லாம் சொல்லி எங்களை சிரிக்க வைப்பார்.

இதை விட முக்கியமாய் சுபேசன், ஐங்கரன், சுகாஸ், காந்தன், தேவசேனாதிபதி அண்ணா அவர்களில் குறும்புத்தனங் களையும் சொல்லிச் சிரிப்பார். அம்மாவின் நண்பிகளாக செல்வமணிரீச்சர்,பாலசிங்கம்ரீச்சர்,சுகந்திரீச்சர், குலசிங்கம்ரீச்சர், சிற்றம்பலம்ரீச்சர்,சாந்தாரீச்சர் இவர்களுடன் Staffroom ல் விடும் நகைச்சுவையான சம்பவங்களைக்கூட எமக்குக் கூறுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிட அம்மாவின் மாணவிகளாகவும்,நண்பிகளாகவும் விளங்கிய நிர்மலாரீச்சர், ஜெயந்திரீச்சர் பற்றியும் அவர்களது நகைச்சுவை பற்றியும் எமக்கு கூறுவார். பேரப்பிள்ளைகள் மீதும் மிகுந்த பற்றும் பாசமும் உடையவர். கேசிகனை 'பற்றன்று' என்று செல்லமாகவும், ஐக்சிகா 'பஞ்சுக்குட்டி' என்று செல்லமாகவும் கூறுவார். பேரப்பிள்ளைகளைவிட கல்விபயிலும், செயற்பாடுகளிலும் மிகுந்த கரிசனை உடையவர். தனது பேரப்பிள்ளைகளாகிய திருவரங்கன், துளசி மாதிரி இவர்களையும் முன் நிலைக்கு கொண்டு வரவேண்டும் என எனது அம்மா அடிக்கடி கூறுவார்.

தனது இறுதிக்கால வாழ்க்கையில் நயினை நாகபூசணி அம்மன்,சத்தியசாய்பாவா,பத்திரகாளி அம்மன்,யேசுநாதர் மீதும் மிகுந்த பக்தி கொண்டவர். Rockey Teacher Prayer அவவை மனம் கவர்ந்தது. போதர்மார்களையும் Pray பண்ணும்படி கேட்பார். "யேசுநாத உமது இரத்தத்தால் என்னைக் குணப்படுத்தும் என்றும் சொல்லுவார்.

வரனும் இறுதிக்கட்டத்தில் வந்து அம்மாவிற்கு செய்யவேண்டிய கடமைகள் யாவற்றையும் செய்து முடித்து உள்ளார். இறுதி நாளில் என்னுடைய கையால் சோறு, தயிர்யாவும் தானே வேண்டி உண்டார். தனது மருமகன் சேகர் தனக்கு Drink பருக்கிவிட்டதாக மிகவும் பெருமையாகக் கூறினார்.

அம்மாவின் பிறந்த நாளன்று நல்ல Prayer Rockey Teacher, Antany போதகர் வைத்து விட்டுப் போகும் பொழுதும் மீண்டும் ஒருக்கா Pray பண்ணும்படி Rockey Teacher இடம் கேட்பார். அம்மாவிற்கு பிரியமான மாணவர்கள் அநேகர் அம்மாவைப் பார்த்துக்கதைத்து உள்ளனர்.

இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு தனக்கு மிகவும் பிரியமான Noel Sir பார்க்க ஆசைப்பட்டு, அவர்களின் வீட்டிற்கு தன்னை அழைத்துப் போகும்படி கேட்டு, Sir வீட்டிற்குவந்த பொழுது மிகவும் மகிழ்ச்சியாக Sir உடன் உரையாடினார். தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருமகள் சந்திரி அக்கா மச்சாள் மாமியையும் உடனடியாகப் பார்க்க ஆசைப்பட்டு, உடனடியாக வரவளைத்து அவர்களுடனும் உரையாற்றி உள்ளார்.

நாம் கண்ட கனவுகள் யாவும் நிஜமாக உள்ளன. அம்மாவிற்கு Canser என்று அறியும் முன்பே ஒரு நாள் நான் நித்திரை செய்து கொண்டு இருந்த பொழுது அம்மாவிற்கு Canser என்று கனவு கண்டு திடுக்கிட்டு எழும்பினேன். வரன் அவுஸ்ரேலியாவில் இருந்து திடீரென வந்து போவதாகக் கனவு கண்டேன். அம்மாவின் வருத்தத்தின் ஒவ்வொரு கட்டமும் வருத்தம் வரும் முன்னமே கனவில் கண்டுள்ளேன். இறுதியாக நான் கண்ட கனவில் சுவாமி அறையில் ஒரு பக்கம் ஒளியாகவும்,மறுபக்கம் இருள் ஆகவும் உள்ளது. மின்குமிழை கவிட்டுப்பூட்டும்படி அம்மா கூறுகிறார். எனக் கனவுகண்டேன். எனது கணவர் கனவு காண்பதே மிகவும் அரிது என்று தான் கூறுவார். ஆனால் ஒரு நாள் சேகர் கூறினார். என்னிடம் அம்மா சேகரை கவனமாகப் பார்த்துக்கொள்ளும் என்று கனவு கண்டேன் என்று கூறினார்.

ஒரு நாள் அம்மா தனக்கு மிகவும் பிரியமான மாணவனாகவும், உறவினராகவும் தற்பொழுது உப அதிபராகவும் விளங்கும் Chanthiran Francis அவர்களை தனக்கு மாலை போட்டு, உரையாற்றி தனது மரணக்கிரியை சிறப்பாக நடாத்த வேண்டும் என்று கூறினார்.

இன்னும் அம்மாவைப்பற்றிச் சொல்லப்போனால் ஒருநாள் அம்மா, தக்ஷா இங்கேவாரும் நான் வேறு வீட்டில் வந்து இருக்கிறேன் என்று கூறினார். இறுதியாக நான் நயினாதீவு போகப்போகிறேன் என்று கூறி உள்ளார். இத்துடன் அம்மாவின் ஆத்மா சாந்தி அடைய இறைவனின் பாதார விந்தங்களை வேண்டிக் கொண்டு நிறைவு செய்கின்றேன்.

அன்பு மகள்
தக்ஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுடைய அம்மம்மா

அம்மம்மா ஐக்சி னேசரிக்கு போகாமல் இருக்கும் போது படிப்பித்தார்.

அம்மம்மா பாடம் படிப்பிப்பார்

அம்மம்மா கடவுள் வணங்குவார்

அம்மம்மா பேச்சுப்போட்டியில் வெல்லச் சொல்லுவார்

அம்மம்மா சோதனையில் வெல்ல படிப்பிப்பார்

அம்மம்மா புத்தி சொல்லுவார்

அம்மம்மா கணிதம் ஆங்கிலம் ஆகிய பாடங்கள் படிப்பிப்பார்.

அம்மம்மா சோதனை வர முன்னம் படிக்கச் சொல்லுவார்

அம்மம்மா சோதனை வரும் முன்னம் படிப்பிப்பார்

அம்மம்மாவை மதிப்போம்

அம்மம்மா கோயிலுக்குக் கூட்டிச் செல்வார்

அம்மம்மா ஓட்டோவில் கூட்டிச்செல்வார்

அம்மம்மா குழந்தையில் தூக்கி வளர்த்தார்

அம்மம்மா கதை சொல்லுவார்

அம்மம்மா எங்கள் உடையை தைப்பார்

அம்மம்மா நல்லவர்

அம்மம்மா மாலையில் விளையாடச் சொல்லுவார்

கேசிகன்

## என் பாசம் மிகுந்த அம்மம்மா

எனது அமம்மா என் மீது மிகவும் பாசமும், அன்பும் கொண்டவர்.
எங்களுக்கு இறைபக்தியை எமக்கு ஊட்டுவார்
நல்ல கதைகள் சொல்லித் தருவார்.
எம்மைப் பாட்டுப்பாட வேண்டும், நடனம் ஆட வேண்டும் என்று கூறுவார்.
நன்றாகப் படிக்க வேண்டும் என்று கூறுவார்.

அன்பு பேர்த்தி
ஐக்சியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Appamma

My appamma was so lovely. I remember her gentle smile. She always cared about all of us and encouraged us to do our best. She often said to be good.

I have great memories with my appamma. She never forgot to send me birthday cards. Every time when I visit Sri Lanka, she used to give me little gifts. I remember last time I got a beautiful pearl purse from her.

I miss my appamma lots and lots and wish she was still alive.

Loving granddaughter
Akshaya.

Rest in peace appamma.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dear Akkamma,
You were so kind to me
All the time when I visit
Sri Lanka, you made me
delicious food and made me
so happy. I still remember
the days when you took me
to the temkles in Jaffna.

I wish you didn't die.
I love you akkamma.

thank you

Rest in peace

From loving
grandson
Vinoth.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னமாமி !!!

எனக்கு இன்னும் பசுமையாக ஞாபகம் இருக்கிறது. நீங்கள் திருமணம் முடித்து சின்னமாமாவுடன் கைபிடித்து எங்கள் வீட்டிற்கு வந்த நாள். எவ்வளவு இனிமையான நாட்கள். உங்களுக்கு இன்று தெரியுமா? எனக்கு அப்போ பதினைந்து வயது. அப்போ சொல்ல வயதில்லை எனக்கு இப்ப சொல்ல நீங்கள் இல்லை. எங்கள் பாட்டனின் குடும்பத்தினர் யாரோ சொன்னதாக நினைவு. அம்மம்மா கூறினார். சின்னமாமா ஒரு கண்ணனுடன் ராதை இருக்கும் படம் வைத்திருந்தார். "கேசவன் இந்தப் படத்தை வைத்திருந்து இந்த ராதை போலவே பெண் எடுத்துவிட்டான்" என்று.

அம்மம்மா மேலும் சொன்னார். சின்னமாமா கவலைப்படுகிறார். நான் வெளியில் திருமணம் செய்துவிட்டேன். இந்தப் பிள்ளைகள் அண்ணனின் பிள்ளைகளோடு ஒற்றுமையாக இருப்பது போல் என் பிள்ளைகளுடன் இருப்பார்களா? என்று. நீங்கள் அவருடைய பிள்ளைகளோடும் அப்படிப் பழக வேண்டும் என்றார். இதை மனதில் வைத்தோ என்னவோ சின்னமாமாவும் நீங்களும் ஒவ்வொரு வருடம் வந்து போனீர்கள். அது மட்டுமா தங்கை, தம்பி பிறந்த பிறகும் அடிக்கடி வந்து எங்களுடன் பழகி விட்டீர்கள். மேலும் எனது விடுமுறை நாட்களில் பெரும்பகுதி உங்கள் வீட்டில் தானே ~~[illegible]~~ கழித்திருக்கிறேன். முதல் முதல் Aero plane இல் உங்களுடன் பயணம் செய்தது முதன் முதலில் intercity express ~~[illegible]~~ Air condition பூட்டிய புகையிரதப் பெட்டியில் பயணம் செய்தது எதையும் மறக்க முடியாது. —> P.T.O



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபலமான இசைக் கச்சேரி ஒன்றுக்கு முதன்
முதலில் என்னையும் உடன்கூட்டி அழைத்து
ச் சென்றார்கள். அக்கச்சேரி கேட்டது எனது
டைய music Diploma பரீட்சையில்
இசை விமர்சனம் எழுதி அதிகமான புள்ளிகள்
(முதல் தரத்தில்) பெற உதவியாக இருந்தது.

வருண் ஒரு பிள்ளையாக இருக்கும்
பொழுது கதை சொல்லக் கேட்பான். நான் நீண்ட
கதையாக இராமாயணம், மகாபாரதத்தை தொடர்
போல சேர்த்துச் சொல்லுவது நேரத்தைக் கழிக்க.
அதையே மீண்டும் மீண்டும் கேட்பான் ஞாபகம்
சலிக்காமல் சொல்வேன் கேட்டுக் கேட்டுச் சிரிப்பான்
இக்கதைகள் எங்களுடைய அப்பா எங்களுக்குச்
சொல்லி எனக்கு மனப்பாடமாகி விட்டது.
அதற்குப் பெரியவனில் நன்றி கூறி நீ நடக்கதை
கள் வருணுக்கு G.C.E O/L பரீட்சையில் நல்ல
சித்தி எய்தக் காரணமாயிற்று என்று நீண்ட ஒரு
வாழ்த்துக் கடிதம் எழுதியிருந்தார். இன்றும்
அதை நான் பத்திரமாக வைத்திருக்கிறேன்.

சின்னமாமா நைஜீரியா
புறப்பட்ட போது "சியா நீர் தான் வரவேண்டும்
சின்னமாமாவின் suite case அடுக்கித் தரவேண்டும்
நீர் நல்ல கட்டுவர் பக்தி. உம்மில் எனக்கு மிகுத்
த நம்பிக்கை என்று அழைத்தார். ஒரு முறை
எனது திருமணப் பேச்சின் போது வருணுக்கு அந்தப்
படம் பிடிக்கவில்லை என்றதும் அதைப் பற்றி
சக ஆசிரியர்களிடம் விசாரித்து விட்டு சின்னமாமா
அவருமாகப் பெண் கேட்டுப் போனார்கள் தியாகரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படிக் காட்டிக் கட்டையாகு என்று பாதலை
பாடசாலைக்கு அவசியமாக விரும்பி எடுத்துக்
கொண்டு முதல்முதலில் தனியாக மானிப்பாய்க்கு
பஸ் ஏறிச் சென்றதை என்னால் எப்படி மறக்க
முடியும் சிறியமாமி?

உங்களோடு சேர்ந்து இருந்த
காலங்களில் எவ்வளவு நல்ல விடயங்களை, புத்தி
மதிகளை நான் கேட்டுக்கொண்டேன். உங்களிடம்
காரணங்களைக் கேட்டுக் கேட்டு மகேசுக்கும் நல்ல
அறிவு வளர்ந்திருக்கு என்று நம்பிக்கையோடு கூறு
வார்கள். "மகேசு எந்நேரமும் ஏதேனும் கூறுவார்
அம்மாவுக்கு உங்கள் கெட்டித்தனத்தில் ஆறுதல்
அதிகம். நான் அவர்களைக் கேட்டுப் பார்ப்பேன் என்று
சொல்லுவார் என்று.

விஜயரத்தினம் வீட்டில் இருந்த
போன்று அவர் இப்படிச் செய்வார் என்று நினைக்கவும்
கற்றுக் கொடுத்த காலமும் படிப்பால் பிள்ளைகள் சிறந்
த வளர்ந்தார்கள் பெற்றோருடன் சேர்ந்தும்
என்று கட்டிக் காப்பாற்றினார்கள். நீங்கள் நினைத்
தது போலவே உங்கள் பிள்ளைகளை நன்றாகப்
படிக்க வைத்து அவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்
புகளை வைத்து நிறைவேற்றிப் பெருமிதத்துடன்
நீங்கள் எல்லாம் நிறைவாக வாழ்ந்தீர்கள்.
யும் கண்டு மகிழ்வில் நிறைவு கண்டீர்கள்.

நினைவலைகள் பெரு காட்டங்க
உங்களோடு சேர்ந்தும் தனியாக அடிக்கடி பழ
பேத்திகளும் ஒரு பிடிப்பு என்று காலமிருந்து அவர்
னை உடல் நலமில் மிகுந்த அக்கறையுடன்
கவனித்துக் கொண்டதையும் நாம் அறிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னையாமா தன்னைக்குள் அங்
காரப் பிரவகிப்பினை உடையவிலிருந்து உனது
வரவு நான் நான் காண்கின்றேன் என்று அவசிக்
கு வேண்டிய உயிர்ப்பும் வசிக்க மாட்டார்
நான் நான் பார்த்துச் செய்ய வேண்டும் என்று
அன்பேயிலும் வாழ்வை போலும் கூடு விட்டார்.
நீங்கள் பிறேஜுடன் வாழ்ந்த
ம் போது "என்னை சாமர்த்தியமாக அழுத்தி
விடு" என்றும் வாடாத வீட்டிலிருந்தீர் போலும்.
பிரெஞ்சுக்கு வேறு வழியொன்றும் தெரியாமல்
கிருத் கொடு தேசத்தைக் கொடுத்து உங்களை
அனாதையாக அழைத்து விட்டான்.
என்றும் புன்முறுவல் பூத்த
முகமும் நிமிர்ந்த அன்னம் போல நடையும்
கொண்ட உங்கள் அழகிய தோற்றம் மன
மறந்து ஆண் போல் எங்கள் நெஞ்சில் பதிந்து
விட்டது. உங்களுக்கு வந்த இந்த கொடி
நோயிலிருந்து நிவாரணம் கொடுக்கும் விஞ்ஞானம்
எங்கள் கையிலிருந்தும் உங்களை அழிவிலிருந்து
காப்பாற்ற முடியாத பாவி ஆகி விட்டேன்.
உங்களிடம் இன்றுமட்டும் சொல்லிக்கொள்ள
இந்த வியாதி எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்
கள் அயலவர்கள் நண்பர்களையும் அப்படி
ஏற்படட்டும் எங்களிடம் இரக்கமில்லா அந்த
நிவாரணம் அவர்களுக்கு உதவ வேண்டும் என்றும்
எங்களுக்காக பிரார்த்திக்க வேண்டிக் கொள்கிறோம்

நீங்கள் உங்கள் முன் ஜென்ம
வினையெல்லாம் தீர்த்து விட்டீர்கள். இப்போ
இறைவனின் பாதக் கமலங்களில் ஆறுதலாக
உள்ளீர்கள். உங்களைப் பிரிந்த நாங்கள்
கண்ணீர் மல்க நிற்கின்றோம்.

உங்களது ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்
உங்கள் அன்பு
மச்சாள் அன்று
மருமக்கள். மக்கள் பேரப்பிள்ளைகள்
பிரியா, ஜீவா, சுஜீனி, சுரேசன், பிரதாபன், சுசிலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அன்னாரின் சேவையினை .., நட்பினை மறவா யாழ்பாணக்கல்லூரி பழைய மாணவர் மற்றும் வட்டுக்கோட்டை மக்கள் சார்பாய் .....*

எமது அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய எமது ஆசிரியை திருமதி சுபத்திராதேவி கேசவராயன் அவர்கள் 22.10.2015 அன்று காலமானார்.

என்றென்றும் என்(எம் ) மனதை விட்டகலா அன்பு ஆசிரியை இறைபதம் அடைந்து விட்டார் என்ற துயர்செய்தி அறிந்ததும் ..,மிகவும் அதிர்ச்சி அடைந்தேன் . ஏன்னெனில் ஒரு சில தினங்களுக்கு முன்தான் நண்பர்களுடனும் ..,எனது தாயாருடனும் அவர்பற்றி பேசிககொண்டேன் எனக்கு மட்டுமல்ல எனது தாயாருக்கும் தாய்தமிழினை கற்றுகொடுத்த ஆசிரியை அவர் அவர் எனது (எமது ) ஆசிரியை மட்டுமல்ல அன்பினால் தாய் நட்பினால் உற்ற நண்பி ..ஆம் எமது சக மாணவர்களுக்கு தெரியும் என்னால் அவருக்கு கொடுக்கப்பட்ட செல்லமான புனைபெயர்

"*சீதாபிராட்டியார்* "...அப்படியே அவரை சிலநேரங்களில் சிநேகமாக அவர் முன்னிலையில் கூட அழைத்த ஞாபகம் உண்டு .

ஆசிரியையாகவும் ..,உறவாகவும் ..,உற்ற நண்பியாகவும் எனக்கு(எமக்கு ) கிடைத்த ஒரு அரும் பொக்கிஷம் இவர் என்றால் அது எந்த வகையிலும் மிகையாது .

" வாழ்க்கை என்பது சாகும்வரை அல்ல;

மற்றவர் மனதில் வாழும்வரை.." !!!!!!!!

தாயே நீ எம்மனதை விட்டகலா அன்பிலக்கினம்..இன்று ஏதோ நான்(நாம் ) எழுதி பிதட்டி கொள்ளும் தாய்தமிழ் அறிவினையும் புகட்டியோரில் நீயும் முன்னிலையானவள் . கண்ணீர் மல்க சொல்கிறேன் நீ கோபப்பட்டதை கண்டறியாது என் (எம் ) கண்கள் .

வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது பிறரை மகிழ வைப்பதில் தான் இருக்கிறது என்பதை அறிந்து எல்லோரையும் உன் அன்பு குறும்பு வார்த்தைகளால் மகிழ வைத்தாயே ....தாயே ..!!!

எமக்கு அறிவினையும் ..,நற்பண்புகளையும் அள்ளிக் கொடுத்த எல்லா குருவானவர்களையும் எனக்கு பிடிக்கும் ..ஆனால் தங்களுக்கு என்றுமே தனியிடம் ...

சிந்தனையைச் சரிபார்த்துக் கொள்வதற்கான களம்...மனமுடைந்து விழுமுன் எச்சரித்துக் காப்பாற்றும் ஊன்றுகோல்.., துணிவு தந்திடும் நல்ஆசான். வழி தடுமாறும்போது அன்புடன் இடித்துரைத்து வழிநடத்திய பெருந்தகை .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறிழைக்கும் யாரையும் கண்டிப்பதில்லை அவர்களின் அறியாமையைப் பார்த்து எள்ளி நகையாடுவதுமில்லை நான் உங்களை உங்கள் திறனை மதிக்கிறேன் அதுபோல் நீங்களும் எனக்கு மதிப்பைத் தாருங்களேன் என்று தன்னுடைய புன்னகையால் சைகை தந்தவள்
உருவத்திலும் ,, உள்ளடக்கத்திலும் எமக்கெல்லாம் உதாரணமான அன்புருவே மாறாது உன் நினைவு என்(எம்)ஆயுள் வரை...
யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் ..,வட்டுக்கோட்டை வாழ் மக்களுக்கும் அளப்பரிய சேவையாற்றிய அன்புஜீவன் எம்மைவிட்டு பிரிந்த துயர் செய்தியினை கலைமலர் மல்க அன்னாரின் அன்பு மாணாக்கனாய் ..,உறவாய் பகிர்ந்து கொள்கிறேன்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் ...அவருடைய குடும்பத்தினர் ஆறுதலுடன் அமைதி கொள்ளவும் ... அவர் தரிசித்த வட்டூர் கொட்டுடை முருகன் அருள் புரிவாராக .

அன்னாரின் சேவையினை ,, நட்பினை மறவா யாழ்பாணக்கல்லூரி பழைய மாணவர் மற்றும் வட்டுக்கோட்டை மக்கள் சார்பாய் .....

.........(((போ தே))) .. ---வட்டூரான்.....

From Devasena



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## In loving memory of my niece Subathira Teacher

Death is a release from suffering in this world and an adventure into realms unknown.
The only happening that one cannot avoid or present in this world is déath. Death is inevitable to all beings that are born in this world. so it happened to my loving nice subathra their on October 2015 .
We all should bear it with lquaninuty control our emotions and not gwe way to UN neassary grief. Time will assuage our grief gradually and heal our sorrow .
Subathra their upheld the noble tradition and quality of womanhood as a devoted wife loving mother and grandmother ,wife and understanding mother in bar and above all a kind and noble person. she was also a dedicated teacher at the ancient seat of tearing , Jaffna college Vaddukoddai. where I had my education from the year1920to1934fromKindergarden to London Intermediate class .
Man's progress into this world is naked and bare
Men's progress in this world is trouble and care,
Man's egress from the world we know not where,
But if he does well here he will do well there"
ones salvation depends on one self alone
one is one's own saviour
one should strive hard to achieve this goat
by onset by practicing the precepts
of the great teacher who affeared in this world such as jesses chest, lord badly such as jesus Christ , Lord Buddha prophet mohamed and hindu saints the essence of the teaching is

**Be good and do good**
May her soul rest in peace

uncle. a.Velupillai
60,Hammers Avenue
Colombo – 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My dear Friend Subathira Teacher

I have Known Subathra Kesavarajan from her early school days but it was only after we started teaching in the secondary school section that I got to know her well.

She was a very good teacher of Tamil and Hinduism and time in traning her students to take part in various competitions. All her students liked her very much and enjoyed her teaching whenever some students were naughty she would not punish them instead she would advise them.

She got along very well with all the teachers. She was quiet and unassuming and we appreciated her sense of humur. Often in the lady staffroom she would make some very interesting comments which would make us have a hearty laugh. She was in charge of the Hastings house and she performed her duties very well

Her birthplace is vaddukoddai.Her father Mr.Vinayagamoorthy and her Grand Father Mr.Russel were teachers at Jaffna college. She was well known to the people of vaddukoddi and attended all their functions.

Even after her retirement she would attend all the functions of the college. Recently she would walk down the lane and she would visit me and chat with me. She would often walk up and tells me about her illness.

I know all will miss our dear Subadra teacher. May god comfort and be with all her family at this time of sorrow and loss.

Selvamanie Selvadurai



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A Lovable & Caring Personality

I am really privileged to have been asked to give this humble appreciation to a lovable and caring teacher and a close friend, Subathra teacher.

My acquaintance with her goes back to the 1970s . She was then a very pretty, thin , young lady and her father Venayagamoorthy master and family were in the process of finding a partner for her. They found her life partner in the same profession but in another school Jaffna Central College. Following her father's footsteps she devoted her whole life to the teaching profession .

Subathra teacher joined Jaffna College on 1st June, 1966 with a BA degree. She was a great teacher of Tamil Language and Hinduism. Later she was also the Head of the Department of Tamil and Hinduism at College. She shouldered the responsibility of being the House mistress of Hastings House for long years from 1966. We could always witness her every evening on the Bicknell field encouraging the girls in her quiet but cheerful way to do their best at the Sportsmeets.

She was felicitated for her 25 years of very loyal service at Jaffna College in 1991, and the administration and the Round Table had a grand function to mark the year along with a couple of other members who also completed fruitful service at College.

Jaffna College was a second home for her and she loved it with all her heart. I had a lot of respect for her and in turn she had approached me many a time to get her decisions and deliberations seconded . She was a straightforward lady with great qualities of kindness, humbleness and helpfulness imbibed in her.

She completed 34 years of very devoted and dedicated service at College and it was very fortunate that it was during my tenure of office as Principal the fitting retirement function took place for her in the Ottley Hall along with Jeeva teacher, Thatparananthan master and Rajeswaran master.

I am indeed very happy that three generations of her family have been teachers at Jaffna College , and now with her grandchildren Theseekan and Jakshika as students at College the fourth generation is taking over and she was a proud grandmother to mention this always to us.

It was a joy to talk to her and her hospitality was exception even during the last days of her illness. We know her loss is irreparable to her family , friends and the students. I would like to quote a very relevant phrase here, " PLEASE DO NOT MOURN ME WHEN I AM GONE, BUT CELEBRATE THE TIME WE HAD TOGETHER" . This what I would say to Mr. Kesavarajan, Varaprathan, Thakshayini, and the family members .Subathra teacher has left behind a life with sincerity, and dedication, therefore, let us give thanks to her beautiful life of witness by manifesting her Creator's greatness, kindness and mercy among the human beings. Let her soul rest in peace and may God sustain her family to overcome this great loss .

DR. NOEL VIMALENDRAN, JP.
Principal Emeritus, Jaffna College



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Our Grade Teacher

A beautiful garden now stands alone missing the one who nurtured it but now she is gone her flowers still bloom, and the sun it still shines but the rain is like tear drops for the ones left behind.

The weeds lay waiting to take the garden beauty away But the beautiful memories of its keeper are in our hearts to stay she loved every flower even some that were weeds so much love she would plant with each little seed But just like her flowers she was part of God's plan.

So when it was her time he reached down his hand

He look through the garden searching for the best

That's when he found our loving teacher it was her time to rest.

Gladys Muthurajah

**அன்பான ஆசிரியர்**

அன்பான பேச்சாலும் எம்மை வழிநடாத்தி "நளவெண்பா" வை நவரசத்துடன் எமக்கு போதித்த எம் அன்பான ஆசிரியை இன்று எம்முடன் இல்லை அவரை நாம் திருமதி கேசவராஜன் என்று அழைத்ததை விட "அன்னமட" என அழைத்தது தான் அதிகம். அன்னம் போன்ற அழகிய எம் ஆசிரியை எம்மைவிட்டுச் சென்றாலும் கூட அவருடைய நினைவுகள் என்றுமே எம்மை விட்டு நீங்கி விடமாட்டாது. அவருடைய ஒவ்வொரு மாணவருடைய மனங்களிலும் அவர் என்றுமே வாழ்ந்து கொண்டிருப்பார்.

அன்பான மாணவி

Gladys Muthurajah



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்பான ஆசிரியர்**

அன்பான பேச்சாலும் எம்மை வழிநடாத்தி "நளவெண்பா" வை நவரசத்துடன் எமக்கு போதித்த எம் அன்பான ஆசிரியை இன்று எம்முடன் இல்லை அவரை நாம் திருமதி கேசவராஜன் என்று அழைத்ததை விட "அன்னமட" என அழைத்தது தான் அதிகம். அன்னம் போன்ற அழகிய எம் ஆசிரியை எம்மைவிட்டுச் சென்றாலும் கூட அவருடைய நினைவுகள் என்றுமே எம்மை விட்டு நீங்கி விடமாட்டாது. அவருடைய ஒவ்வொரு மாணவருடைய மனங்களிலும் அவர் என்றுமே வாழ்ந்து கொண்டிருப்பார்.

அன்பான மாணவி

Gladys Muthurajah



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்ந்த கவலையுடன்:-

தலைவர்,
சங்க உறுப்பினர்கள்
மானிப்பாய் இந்துக்
கல்லூரி பழைய
மாணவர் சங்கம்

**பப்பாசி**

**அந்திய கால சேவை**

0777176998

60, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்

Tp: 021 7210084
077 6262414
077 5081768

---

**றோயல் மலர்ச்சாலை**

**அந்தியகால சேவை**

சாங்கானை றோட், மானிப்பாய்.

T.P No 0777169998, 0775081768

[illegible]

இருந்து Principal and Staff
J/Manipay Hindu College



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

பிறப்பு
17
.
10
.
1940



இறப்பு
22
.
10
.
2015

அமரர்

## திருமதி.சுபத்திராதேவி கேசவராஜன்

(முன்னாள் ஆசிரியை யாழ்ப்பாணக் கல்லூரி, அராலி மேற்கு வட்டுக்கோட்டை)

*அன்பு என்பதன் அர்த்தம் புரிந்து*
*அடுத்தவன் மனதை நோகடிக்காமல்*
*தியாகம் என்பதன் உச்சியைத் தொட்டு*
*ஆசை என்பதை அறுத்து நின்று*
*அடுத்தவன் உயர்வில் சிரித்து நின்று*
*ஈகை என்பதை இலக்காய்க் கொண்டு*
*பாசம் என்ற பதத்தை புரிந்து*
*பண்பு என்பதன் இலக்கணம் காத்து நின்றாய்*
*உன் புகழ் பரவும் இப் பூமியில் என்றும்!*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் த.தவசேகர் குடும்பத்தினருக்கும் (விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை) எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

*பிரிவால் துயரும்*

**கணித, விஞ்ஞான ஆசிரிய மாணவர்கள் 2015**
**கோப்பாய் ஆசிரிய கலாசாலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்

17 - 10 - 1940



மறைவு

22 - 10 - 2015

## திருமதி. சுபத்திராதேவி கேசவராஜன்

### [ஓய்வு பெற்ற ஆசிரியை யாழ்ப்பாணக்கல்லூரி]

### கே.வரப்பிரதன் அவர்களின் அன்புத்தாயார்

### முன்னாள் தலைவர் வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கம்

ஒளிவீசும் உந்தன் திருவதனம் இன்று
இருள் கொண்டு போனதேனம்மா?
விழி சேராமல் நமைக்காத்து நிற்கும்
இனி உனைக்காண்பது எப்போதம்மா

காலன் தன் வேலைதனை
கடிதென முடித்திட்டானே!
மடிந்த உம் செய்தி கேட்டு
மட்டில்லா துன்பம் கொண்டு
மண்மிசை புரள்கின்றோமே!
விட்டவன் அழைத்தானோ
கட்டுடல் தன்னை விட்டு
காற்றினில் தவழ்ந்து சென்று
விண்ணகம் சேர்ந்து விட்டீர்.

உறவுகள் போற்றி வாழ்ந்த
உத்தமியே உம்மை
மறந்திட நினைக்கமாட்டோம்
மனங்களில் நிலைத்து வாழ்ந்திடுவோம்

அன்னாரின் பிரிவால் ஆறாத்துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இந்துவாலிபர் சங்கம் வட்டுக்கோட்டை
வட்டு இந்துவாலிபர் சங்கம் கொழும்புக்கிளை
வட்டு இந்துவாலிபர் சங்கம் கனடாக்கிளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவி

மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம்

Karuvi කරුවි

Centre for Social Resource of Differently Abled

Regd. No.: GL2262

T.P- 078 990 2336, 021 205 4224
Email - karuvi.org@gmail.com
Commercial Bank, A/C No. 1127021870
Web Site - www.karuvi.org

1165/15, அருளம்பலம் ஒழுங்கை, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
1165/15, Arulampalam Lane, Nallur North, Jaffna.


குடும்பத்தினர் - கேசவராஜன்
இல-35, தெல்லிப்பளை வீதி,
பிட்டக்கொட்டை

ஞாபகார்த்த அறக்கொடை

அன்புடையீர்

கடந்த 22/10/2015 திகதிய பத்திரிகை வாயிலாக தங்கள் குடும்ப அங்கத்தவர் சுபத்திரா தேவி கேசவராஜன் அவர்கள் இறைபதம் சேர்ந்ததை நாம் அறிந்து கொண்டோம். தங்கள் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்தியடைய வேண்டுமெனப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையமானது அங்க இழப்புக்களோடும் அங்க குறைபாடுகளோடும் வாழ்கின்ற மாந்தர்களின் சமூகப் பணி நிறுவனமாகும். இந் நிறுவனத்தில் பார்வைப் புலனற்றோர், செவிப்புலனற்றோர், கை, கால் பாதிப்புற்றோர் மற்றும் மனவிருத்தி குன்றியோர் அங்கத்தவர்களாக உள்ளனர்.

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம் மாற்றுத்திறனாளிகளை சமூக விருத்தியின் ஆரோக்கியமான பங்காளர்களாக மாற்றுவதைப் பிரதான நோக்கமாக கொண்டு பணிகளை முன்னெடுத்து வருகின்றது. கருவி மாற்றுத்திறனாளிகள் சமூகவள நிலையத்தினூடாக பின்வரும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

* மாற்றுத்திறனாளிகள் தொடர்பான தரவுகள் சேகரித்தல்.
* மாற்றுத்திறனுடைய பிள்ளைகளை கல்வி நீரோட்டத்தில் இணைத்து ஏனையவர்களுடன் கல்வி நிலையில் சமப்படுத்தலும், கல்வி வாய்ப்பை இழந்த மாற்றுத்திறனுடைய பிள்ளைகளுக்கு பொருத்தமான கல்வி வாய்ப்பை வழங்கலும்.
* திறன்களிற்கு ஏற்ப துறைசார் பயிற்சியை வழங்கலும் பொருத்தமான தொழில் வாய்ப்பை பெற்றுக்கொடுத்தலும்.
* மாற்றுத்திறனாளிகளின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதல்.
* முதியோர் மற்றும் நலிவுற்ற பெண்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்கல் அல்லது பெற்றுக் கொடுத்தல்.
* அனர்த்த / விபத்திற்கு உட்பட்டோரை ஒழுங்கமைப்படுத்தல்.
* கல்வி உதவிகளை வழங்கல் அல்லது பெற்றுக் கொடுத்தல்.
* புனர் வாழ்வு நிலையம் ஒன்றை ஸ்தாபித்தல்.
* மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தல்.
* சமூகத்தை மையப்படுத்திய பணிகளில் மாற்றுத்திறனாளிகளை பங்கெடுக்க வைத்தல்.

இப்பணிகள் யாவும் தங்களைப் போன்ற நலன்விரும்பிகள், ஆர்வலர்கள், கொடையாளர்கள் போன்றோரின் பங்களிப்பினைக் கொண்டே சிறப்புற முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே விட்டுப்பிரிந்து அமரத்துவம் எய்திவிட்ட சுபத்திரா தேவி - கேசவராஜன் அவர்களின் ஞாபகார்த்தமாக தாங்கள் ஏதேனும் அறப் பணிகள் செய்ய விரும்பின் கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையத்தினூடாக ஆற்ற முடியும் என்பதனைத் தங்களுக்குத் தயவுடன் தெரிவித்து நிற்கின்றோம்.

நன்றி

பணிப்பாளர் சபை
கருவி

சனிக்கிழமை மற்றும் விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய வார நாட்களில் எமது அலுவலகம் மு.ப 09.00 மணியிலிருந்து பி.ப 04.00 மணிவரை இயங்கும்.

மறுபக்கத்தில் கருவி அமைவிடம் வரைபடத்தைக் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAAFFNA COLLEGE PRINCIPAL & ADMINISTRATORS

# JAFFNA COLLEGE ROUND TABLE

# JAffna COLLEGE STUDENTS' COUNCI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்த மருத்துவத்தில் இருந்து ஆரோக்கியமாய் வாழ சில ஆலோசனைகள்

1) உணவே மருந்து மருந்தே உணவு மருந்தை யாரும் அதிகம் விரும்புவார்களா? உணவை வாழ்வதற்காகவும் சாப்பிடலாம்.
2) பூண்டு, வெங்காயம் அதிகம் உணவில் சேர்த்து வந்தால் தேவையற்ற கொழும்பு குறையும்.
3) நார்த்தங்காய் ஊறுகாய் மலச்சிக்கலைப் போக்கி நல்ல ஜீரண சக்தியைக் கொடுக்கும்.
4) சீரகத்தை பொன் வறுவலாக வறுத்து பொடி செய்து சூரணமாக பனைவெல்லம் சேர்த்து சாப்பிட நன்கு பசி எடுக்கும்.
5) வாழைப்பட்டையை தீயில் வாட்டி சூடேற்றிப் பிழிந்து ஓரிரு துளிகள் விட காதுவலி குணமாகும்.
6) வண்டு, பூச்சி. கடிக்கு வெள்ளைப்பூடை அரைத்து கடிவா யில் கட்டி விஷம் முறியும்.
7) அன்னாசிபழம் தினம் சாப்பிட வயிற்றுப்பூச்சிகள் ஒழியும்
8) தேங்காய் பாலுடன் தேன் கலந்து குடித்தால் வாய்ப்புண் குணமாகும்.
9) பீட்ரூட் கிழங்கை அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் உடல் வளர்ச்சி நன்றாக இருக்கும் நரம்பு தளர்ச்சி நாளடைவில் சரியாகும்.
10) நெல்லி மர இலையை நீரில் இட்டு காய்ச்சி வாய் கொப்பளிக்க வாய்ப்புண் தீரும்.
11) விளாம்பழம், நெல்லிக்காய் தினமும் தொடர்ந்து சாப்பிட்டு வர மருந்து, மாத்திரை ஊசி அவசியம் ஏதும் இல்லை.
12) சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு கால்களில் சிறிய புண் ஏற்பட்டால் உடனடியாக கவனித்துவிட வேண்டும்.
13) மழைக்காலங்களில் முசுமுசுக்கை இலையைச் சாப்பிட்டு வர சளி, இருமல் வர விடாமல் தடுக்கலாம்.
14) நாட்டு வாழைப்பழம் (நன்றாக பழுத்த) ஆலிப் ஆயில் சேர்த்து பிசைந்து முகத்தில் தடவி 1 மணி நேரம் கழித்து முகம் கழுவி வர முகம் பளபளக்கும்.
15) முட்டைகோஸ் சாற்றை முகத்தில் தடவி வர முகச்சுருக்கம் மறையும்
16) பொன்னாங்காணி இலையை காலையில் மென்று தின்று பால் பருகி வர கண்பார்வை தெளிவு பெறும்.
17) முருங்கைப் பிஞ்சுகளை நசுக்கி சாறு எடுத்து அந்த சாறுடன் தேன் கலந்து 2 வேளை வீதம் 3 நாட்கள் சாப்பிட ஜலதோஷம் விடுபடும்.
18) மலர்ச்சிக்கல் சரியாக அகத்திக் கீரையை நிழலில் உலர்த்தி பொடி செய்து காலை மாலை ஒரு ஸ்பூன் பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் தீரும்.
19) மலச்சிக்கல் தீர இரவில் மாம்பழம் சாப்பிடலாம்.
20) விளாம்பழம் கிடைக்கும் காலங்களில் தினசரி ஒன்று சாப்பிட்டு வர பித்தத்தை குறைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21) கரட், எலுமிச்சம் பழச்சாறு கலந்து தேங்காய் எண்ணெய்யில் காய்ச்சி தலைக்கு தேய்த்து வர முடி நன்றாக வளரும்.

22) தினசரி கொய்யாப்பழம் சாப்பிட்டு வந்தால், இரத்தச்சோகை அகலும்.

23) அகத்தி இலை அவித்த தண்ணீர் பருகினால் வாய்ப்புண் ஆறும்.

24) வாழைப்பூவை வேகவைத்து அல்லது பொரியல் செய்து சாப்பிட்டு வர நீரிழிவு நோய் கட்டுப்படும். அஜீரணம் அகலும்.

25) நொச்சி இலை (வெள்ளை) போட்டு நீராவி பிடிக்க கடுங்காய்ச்சல் குணமாகும்.

26) இரவில் கண்விழித்து நெடுநேரம் வேலை செய்பவர்கள் காலையில் இளநீர் தொடர்ந்து சாப்பிட 8 நாட்களில் வயிற்றுவலி தீரும்.

27) "ஏழைகளின் ஆப்பிள்" என்று சொல்லப்படும் தக்காளிப் பழம் உண்டு வர இரத்தம் சுத்தமாகி உடல் வலுப்பெறும் வாதநோய் உள்ளவர்கள் தவிர்த்தல் வேண்டும்.

28) புதிய இரத்தம் உருவாக்குவதில் பீட்ரூட் கிழங்கு வலிமையானது.

29) வெண்டைக்காய் உணவுடன் அடிக்கடி சேர்த்து வர மூளை பலமடையும். கண்களுக்கு குளிர்ச்சி தரும்.

30) எலுமிச்சை சாரில் ஊறிய சீரகத்தை உலர்த்தி பொடியாக்கி வைத்துக் கொண்டு குமட்டல் வரும் போது சுவைக்க குமட்டல் நீங்கும்.

31) எண்ணெய் தேய்த்து குளிக்கும் போது பச்சைத் தண்ணீர் சேர்க்காமல் ஒரே சூடான தண்ணீரில் தான் குளிக்க வேண்டும்.

32) போலியோ சொட்டு மருந்து தயாரித்த இடத்திலிருந்து குழந்தையின் வாயில் விழும் வரை 8 டிகிரி செல்சியஸ் குளிர்ந்த நிலையில் இருந்தால் தான் பயன்தரும்.

33) வாழைக்காய் சமைத்து உண்பதால் இரத்தம் பெருகும். அதிகம் உண்டால் வாய்வுத் தொந்தரவு ஏற்படும்.

34) சந்தனம் முகத்தில் அடிக்கடி பூசி காயவிட்டு முகம் கழுவ சூட்டினால் முகத்தில் வரும் சிறுகட்டிகள் வராது.

35) இதய நோய் உள்ளவர்கள் ரீ குடிக்கலாம். காபி தவிர்த்தல் நலம்

36) **சளித்தொல்லை நீங்க:** தூதுவளை செடியில் ரசம் வைத்து, சாப்பிட ஜலதோஷம் ஓடும்.

37) **தொப்பை குறைய** : சுரைக்காய், வாரம் 2 தடவை சாப்பிட்டுவர தொப்பை குறையும்.

38) **குடல் புழுக்கள் அழிய**: மாதுளம்பழம் சாப்பிட குடல் புழுக்கள் அழியும்.

39) **முதுமை அடைவதை தடுத்து, உடல்பலம்பெற**: தினம் அதிகாலை ஒரு நெல்லிக்கனி சாப்பிட்டால் உடல் பலம் பெறும்.

40) அல்சர் குணமாக தினமும் ஒரு டம்ளர் திராட்சை பழச்சாறு குடித்து வர அல்சர் குணமாகும்.

41) தூதுவளை ரசம் வைத்து மதிய நேரம் சாப்பிட்டு வர ஜலதோசம் நீங்கும்.

42) கம்பளி பூச்சி கடிக்கு வெற்றிலையை கடிவாயில் வைத்து அழுத்தி தேய்க்க குணம் பெறலாம்.

43) ஏலக்காய் பொடியை தேனில் கலந்து ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப்பிட்டு வர வயிற்றுவலி, வயிற்று பொருமல், அஜீரணம் குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44) கண்டங்கத்தரி பழத்தை உலர்த்தி நெருப்பிலிட்டு வாயில் புகை இழுக்க பல்வலி, ஈறுவலி குணமாகும்.

45) ஒரு நாள் விட்டு ஒரு நாள் அதிகாலை வெறும் வயிற்றில் மாதுளம் பழம் சாப்பிட்டு வர பற்கள், எலும்பு உறுதியாகும்.

46) தினசரி 2 பேரீச்சம்பழம் சாப்பிட்டு, பால் சாப்பிட்டு வர குளுக்கோஸ் நேரடியாக உடலுக்கு கிடைக்கும்.

47) புளிய இலையை அவித்து சூட்டோடுசூட்டாக சுளுக்கு உள்ள இடத்தில் ஒத்தடம் தந்து கட்ட சுளுக்கு விலகும்.

48) வல்லாரை 150 கிராம், வசம்பு 15 கிராம் பவுடராக்கி தேனில் கலந்து சாப்பிட ஞாபக சக்தி பெருகும்.

49) ஆலம் விழுதை சாம்பலாக்கி நல்லெண்ணெயில் குழைத்து தடவி வந்தால் அக்கி முழுவதும் குணமாகும்.

50) வெள்ளரிக்காய் அதிகம் சாப்பிட்டு வந்தால் சிறுநீர் அடைப்பு, தைானாக விலகும்.நீா நன்றாக பிரியும்.

51) தினசரி ஆட்டுப்பால் குடித்து வந்தால் வலிப்பு நோய் வருவதை தடுக்கலாம்.

52) **கருப்பை கோளாறு நீங்க**: அரசஇலை கொழுந்து 10 லிருந்து 20 எடுத்து அரைத்து மோருடன் பருகிவர கருப்பையில் தங்கிய அழுக்குகள், அடைப்புகள், கட்டிகள், கிருமிகள், சதை வளர்ச்சி ஆகியவை தூய்மை அடையும்.

53) **இதயத்திற்கு பலம் கிடைக்க:** மாதுளை சாறுடன் தேன் கலந்து சாப்பிட ஈரல் இதயம் வலுவடைகிறது ஜீரண சக்தியை அதிகரிக்கும்.

54) **காய்ச்சல் குணமாக**: வேப்பிலையை வறுத்து சூட்டோடு தலைக்கு வைத்து தூங்கினால் காய்ச்சல் நீங்கும். நிம்மதியான தூக்கம் வரும்.

55) **வெறி நாய்கடி குணமாக** : நாயுருவி வேரை அரைத்து கோலி அளவு உருட்டி 15 நாட்கள் சாப்பிட வேண்டும்.

56) **கல்லீரல், மண்ணீரல் நோய் குணமாக** : விளாம்பழ மரத்தின் பட்டையை கஷாயம் செய்து சாப்பிடவும். விளாம்பழ ஓட்டை தூள் செய்தும் கஷாயம் செய்யலாம். விளாம்பழம் தொடர்ந்து சாப்பிட்டு வர கல்லீரல் நோய் குணமாகும்.

57) **முடி உதிர்வதை தடுக்க:** வேப்பிலை 1 கைப்பிடி எடுத்து நீரில் வேகவைத்து ஒரு நாள் கழித்து மறுநாள் வேகவைத்த நீரை கொண்டு தலைமுழுகி வந்தால் முடி கொட்டுவது நின்றுவிடும் பேன் நீங்கும்.

58) **தேள்கடி விஷம்** : நாயுருவி வேரை பச்சையாக மென்று சாறை உட்கொண்டால் தேள்கடி விஷம் நீங்கும்.

59) **வயிற்று போக்கு குணமாக** : மாதுளம் பழத்தை வேக வைத்து சாறு எடுத்து தேனுடன் கலந்து உண்டால் எல்லாவகையான வயிற்றுப் போக்கும் குணமாகும்.

60) **உடல் பலவீனம் நீங்க:** பப்பாளிப்பழம் தொடர்ந்து சாப்பிட்டு வர உடல் பலவீனம் நீங்கிட உதவும்.

61) **இளநரை கருப்பாக** : நெல்லிக்காய் அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் இளநரை கருமை நிறத்திற்கு மாறும். நெல்லிக்காய் ஊறுகாய், நெல்லி வற்றல் சாப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62) **தொற்றுநோய் வராமல் தடுக்க:** செவ்வாழைப்பழத்தை தேனில் அரை மணி நேரம் ஊறவைத்து சாப்பிட்டு வர தொற்று நோய் அணுகாது உடல் ஆரோக்கியம் பாதுகாக்கப்படும்.

63) **குடல் பூச்சி:** மாங்கொட்டை பருப்பை காய வைத்து பொடியாக்கி ஒரு சிட்டிகை தேனில் குழைத்து 1 நாள் 2 வேளைக்கு கொடுக்க பூச்சி அகலும்.

64) **கருவுற்ற தாய்மார்கள்** : கருவுற்ற தாய்மார்கள் சாப்பிட சிறந்த பழம் மாம்பழம்

65) **தேனி கொட்டினால்** : தேனி கொட்டினால் பழைய புளி, சுண்ணாம்பு சேர்த்து பிசைந்து அதை கொட்டு வாயில் அழுத்தி ஒட்ட வைத்துவிட்டால் கடுப்பு நின்று விடும்.

66) **இரத்தத்தில் உள்ள கிருமிகளை ஒழிக்க** : அடிக்கடி விளாம்பழம் சாப்பிட்டு வர இரத்தில் உள்ள கிருமிகளை அழிக்கலாம்.

67) **சுறுசுறுப்பாக இருக்க** : ரோஜாப்பூ இதழ்களை சாப்பிட்டு வர சுறுசுறுப்பு பெறலாம்.

68) சிறுநீரில் உள்ள கற்களை அகற்ற : மாதுளம்பழத்தின் விதைகளை சாப்பிட கொடுக்க நல்லபலன் கிடைக்கும்.

69) **அல்சர் நோய் குணமாக** : குடல் வெந்து ஒட்டை விழுவது தான் அல்சர் ஆகும். அல்சர் கண்டவர்கள் தினமும் ஒரு டம்ளர் திராட்சை பழச்சாறு குடித்து வர அல்சர் குணமாகும்.

70) **இரத்தக்குழாய் அடைப்பு நீங்க** : தினம் ஒரு கப் தயிர் சாப்பிட்டு வர இரத்த குழாய்களில் ஏற்படும் அடைப்பு நீங்கும்.

71) **காலில் குத்திய முள்எடுக்க:** சிறிய முள்ளை எடுக்க கள்ளிப்பால் அல்லது எருக்கன் பால் தடவ முள் வெளியேறும் அல்லது மக்கிவிடும்

72) **கர்ப்பிணி பெண்கள்** : கர்ப்பிணி பெண்கள் தினசரி 2 நெல்லிக்காய் சாப்பிட்டு வர சிறந்தது. வயிற்றில் உள்ள குழந்தைகளுக்கும் சிறந்த டானிக்காக பயன்படுகிறது.

73) **பற்கள் ஆடுவதை தடுக்க** : பற்கள் ஆடும் போது ஆலம் பாலையை பற்கள் மிது தடவினால் பற்கள் கெட்டிப்படும்.

74) எலுமிச்சம் பழ சாறு 4 துளி காதில் விட காது வலி தீரும்.

75) எலுமிச்சை பழசாறு, கரிசலாங்கன்னி சாறு, பால் நல்லெண்ணையில் கலந்து காய்ச்சி தலைமுடிக்கு 6 மாதம் தடவி வர நரைக்காமல் நீண்டு வளரும்

76) **முகவசீகரம்** :- சந்தனக்கட்டையை எலுமிச்சை சாறில் உரைத்து பூசலாம்.

77) **உடல் சிவப்பாக மாற** :- வெள்ளரிக்காய், மஞ்சள். வேப்பம்பூ சேர்த்து அரைத்து உடலில் பூசி குளித்துவர குணமாகும்.

78) **போலியோ சொட்டு மருந்து** :- தயாரித்த இடத்திருந்து குழந்தையின் வாயில் விழும் வரை 8 டிகிரி செல்சியஸ் குளிர்ந்த நிலையில் இருந்தால்தான் பயன்தரும்.

79) **குழந்தைகளுக்கு நோய் வராமல் தடுக்க** :- வசம்பு இலை, மஞ்சள் சேர்த்து அரைத்து தேய்த்து குளிக்கலாம். மேனி அழகுபெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80) **சுகப்பிரசவம் ஆக :** ஆப்பிள்பழம், தேன், ரோஜா இதழ், குங்குமப்பூ, ஏலக்காய் ஆகியவை ஒருமாதம் தொடர்ந்து சப்பிட்டு வரலாம்.

81) **வெட்டுக்காயம் குணமாக :-** இலந்தை மரத்தின் இலையை மைய அரைத்து காயத்தின் மீது கட்டலாம்.

82) **இதயம் பலமடைய :-** அத்திபழம் தொடர்ந்து சாப்பிடலாம்.

83) **நெஞ்சுவலி :-** இலந்தைபழம் சாப்பிடலாம்.

84) **இதயத்திற்கு பலம் கிடைக்க :-** மாதுளை சாறுடன் தேன் கலந்து சாப்பிடவும் ஜீரண சக்தியையும் அதிகரிக்கும்.

## வாழ்க்கை

வாழ்க்கை ஒரு சவால் „ அதைச் சந்தியுங்கள்
வாழ்க்கை ஒரு பரிசு „ அதை ஏற்றுக்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒருசாகசப்பயணம் „ அதனை மேற்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சோகம் „ அதனைக் கடந்து வாருங்கள்
வாழ்க்கை ஒரு துயரம் „ அதனைத்தாங்கிக்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு கடமை „ அதனை நிறைவேற்றுங்கள்
வாழ்க்கை ஒரு வினோதம் „ அதனைகண்டறியுங்கள்
வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் „ அதனைபயன்படுத்திக் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு பயணம் „ அதனைத் தொடருங்கள்
வாழ்க்கை ஒரு காதல் „ அதனை அனுபவியுங்கள்
வாழ்க்கை ஒரு உணர்வு „ அதனை உணர்ந்து கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு குழப்பம் „ அதற்கு விடை காணுங்கள்
வாழ்க்கை ஒரு இலக்கு „ அதனை எட்டிப்பிடியுங்கள்

## பொன்மொழிகள்

1) சரியானது இது என்று உணர்ந்தும் பின்பும் அதைச் செய்யாமல் இருப்பது தான் மகா கோழைத்தனம் (கன்பூசியன்)

2) உங்களை நீங்களே மதித்துக் கொள்வது ஆவணம் பிறர் உங்களை மதிப்பது பெருமை (ஸ்டீவன்சன்)

3) காலத்தின் மாறுதல்கள் தான் மனிதனின் உள்ளத்தில் மாறுதல்களை ஏற்படுத்துகின்றன. (எமர்சன்)

4) நான் அடிமையாக இருக்க மாட்டேன் ஆகவே நான் எஜமானாகவும் இருக்க மாட்டேன். இதுதான் ஜனநாயக கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவம் (ஆபிரகாம்லிங்கன்)

5) எந்த மனிதனுடைய இதயத்தை வேண்டுமானாலும் அலசிப் பாருங்கள் பிறரிடமிருந்து ஒழிக்கப்பட வேண்டிய ஒரு இருட்டுப் பகுதியாவது அங்கே இருக்கும் (இப்சன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

ஆத்மா சாந்தியடைய பிராத்தனை செய்த அதி வணக்கத்துக்குரிய பேராயர் Dr.D.S.தியாகராஜாவிற்கும் வணக் கத்துக்குரிய Dr.D.S. சொலமன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இரங்கல் உரைகளை நெறிப்படுத்திய திரு.சதாசிவம் ஆசிரியருக்கும் இரங்கல் உரை வழங்கிய யாழ்ப்பாண கல்லூரி அதிபருக்கும், கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய நலன்புரி சங்கத்தலைவர், மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபருக்கும், வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்க தலைவருக்கும், மலர் வளையம் வைத்த அனைவருக்கும், இறுதிச்சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள் அயலவர்கள் அனைவருக்கும் யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர்களும்,மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்களுக்கும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மாணவர்களுக்கும் மானிப்பாய் லயன் கழகத்தினரும் மற்றும் சமூகம் அளித்த அனைவருக்கும் இந் நினைவு மலருக்கு எழுத்து வடிவில் தமது கருத்துக்களை வழங்கியவர்களுக்கும் எமது மனம்மார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். செய்தி அனுப்பியவர்களுக்கும் எமக்கு வெளிநாட்டிலிருந்தும் உள் நாட்டிலிருந்தும் தொலைபேசி மூலமும் அனுதாபச்செய்தி தெரிவித்தவர்களும்,சுகயீனம் உற்று இருக்கும் போது ஆறுதல் கூறி ,அவருடன் கதைத்து பிரார்த்தனை செய்தவர்களும் உணவு வழங்கியவர்களும் பல வழிகளிலும் உதவி புரிந்த ஏனைய சகலருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.


குடும்பத்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருட்சம்

☆ சித்தம்பலம் + தம்பிராசா + பார்வதிப்பிள்ளை + ☆ விநாயகமூர்த்தி

☆ வேலாயுதர் + ☆ அப்புத்துரை + ரசல்பொன்னம்மா + ☆ வையிரரத்தினம்

பத்திராதேவி

தம்பிராசா ☆ + சிவசோதி

புனிதவதி ☆ + இராஜரத்தினம் ☆

மணிமேகலாதேவி + திருஞானசம்பந்தர் ☆

சிவசோதிராஜா + சுபாசினி

வரப்பிரதன் + லாகினி

ஷயா

வினோத்

அமரர் ☆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"

பகவான்
ஸ்ரீ கிருஷ்ணர்

ABI Printers -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org